23rd March 1963]

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

* 357-A கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவேரி தீரத்தில் தஞ்சை மாவட்டப் பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) எந்த ஊர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Establishment of oil refineries is a matter within the competence of the Union Government. They are examining the suitability of various locations in South India for the establishment of an oil refinery. This Government have been urging the Union Government from time to time to set up this plant in Madras State.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 'ஆயில் ரிபைனரி' ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ரிபைனரி' வேறு, 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷன்' வேறு. தஞ்சை மாவட்டத்தில் நடப்பது 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷன்'. அங்கு எண்ணெய் இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்கு வேலை நடக்கிறது. 'ரிபைனரி' என்பது வெளியிலிருந்து எண்ணெயைக் கொண்டுவந்து சுத்திகரிப்பதாகும்.

திரு. சி. எஸ். பொன்னுசாமி : தலைவர் அவர்களே, ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன்னால் இரண்டு நிபுணர்கள் தூத்துக்குடிக்கு வந்து இடத்தைப் பார்த்துவிட்டு, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தூத்துக்குடியில் வைப்பதா, அல்லது கொச்சியில் வைப்பதா என்று யோசனை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தூத்துக்குடியில் அந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை வைப்பதற்கு வசதி இருக்கிற காரணத்தால், அங்கேயே ஏற்படுத்த வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிபுணர் குழு கேரளம், மைசூர், சென்னை ஆகிய மூன்று ராஜ்யங்களுக்கும் வந்து பார்த்தார்கள். இரண்டு மூன்று இடங்களை ஒவ்வொரு ராஜ்யத்திலும் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்த இடங்களில் தூத்துக்குடியும் ஒன்று. ராஜ்ய சர்க்கார், அதைத் தூத்துக்குடியில் அமைப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன என்பதை எடுத்துக்கூறியிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது ?

[23rd March 1963

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எண்ணெய் இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க இரண்டு, மூன்று பூர்வாங்க ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும். முதலில் 'ஏரோ-மாக்னடிக் சர்வே' செய்வார்கள். இரண்டாவது, 'சீஸ்மிக் சர்வே' செய்வார்கள். அந்த இரண்டும் முடிந்துவிட்டன. மூன்ருவதாக 'டிரில்லிங்' செய்து எண்ணெய் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதை இப்போது மேற்கொண்டிருக்கிருர்கள்.

திருமதி சி. குழந்தையம்மாள்: தலைவர் அவர்களே, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலே மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்குப் பயன்படும் எண்ணெய் மாத்திரம் சுத்திகரிக்கப்படுமா அல்லது இன்சினியரிங் வேலைகளுக்கான எண்ணெயும் சுத்திகரிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கோழி இன்னும் முட்டை இடவில்லை. (சிரிப்பு.) எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் வைப்பதாக இருந்தால் என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிப் பின்பு பரிசீலிக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஆயில் ரிபைனரியைத் தென் மாநிலங்களில் எந்த மாநிலத்தில் வைப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறதா? அல்லது தமிழ்நாட்டில் எந்த இடத்தில் வைப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 'ரிபைனரி'-யைப் பொறுத்தவரையில், தென் மாநிலத்தில் எந்த இடத்தில் வைப்பது என்பதைப் பற்றிய பரிசீலனைதான் நடந்து கொண்டிருக்கிறது. 'ஆயில் எக்ஸ்ப்ளோரேஷனை'ப் பொறுத்தவரையில், தஞ்சை ஜில்லாவில் 'பெல்ட்' என்று சொல்லப்படும் பகுதியிலே வைக்கலாம் என்பது யோசனை.

திரு. இராம. அரங்கண்ணல்: பாண்டிச்சேரியிலிருந்து கந்தர்வக்கோட்டை வரையிலுள்ள பகுதியில் எண்ணெய் கிடைக்குமென்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த திட்டத்தைச் சேர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமாக இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாண்டிச்சேரியிலிருந்து கந்தர்வக்கோட்டை வழியாக கிழக்கு இராமநாதபுரம் வரையில் ஒரு கோடு போட்டால் அந்தப் பகுதியில் எண்ணெய் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. 'டிரில்லிங்' செய்து பார்த்தால்தான் எண்ணெய் இருக்கிறதா, இல்லையா என்று தெரியும்.

திரு. சா. ராமசாமி: பூர்வாங்க சோதனையின் விளைவாக நமது மாநிலத்தில் எங்கெங்கு எண்ணெய் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதைத்தான் சொன்னேன். பாண்டிச்சேரியிலிருந்து கிழக்கு இராமநாதபுரம் வரை வளையமான கோடு போட்டால் அந்தப் பகுதியில் எண்ணெய் இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

23rd March 1963]

திரு. ஆர். ரங்கசாமி : 'ஆயில் ரிபைனரி' யை எங்கே வைப்பது என்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டதா ? அதைக் கொச்சியில் வைக்க முடிவு செய்யப்பட்டுவிட்டதாகப் பேப்பரில் பார்த்தேன். அவ்வாறு முடிவு செய்யவில்லை என்றால் தமிழ் நாட்டில் வைக்க ஏது இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த இடத்தில் ரிபைனரி யை வைப்பது என்ற முடிவு அதிகார பூர்வமாக இன்னும் வரவில்லை. பத்திரிகையில் போட்டிருந்தால், கேள்விகளைப் பத்திரிகைகளுக்கே போடலாம்.

Price control

* 357-B *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken for holding the price line?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

சட்டமன்றத்தின் முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது ?

* 357-C *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps already taken and proposed to be taken for effectively checking speculation, hoarding and profiteering in foodgrains and essential commodities in the State during the Third Plan period?

THE HON. SRI P. KAKKAN : A statement has already been placed on the table of the House in reply to starred Question No. 357-B.

நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 357-(பி) க்கான பதிலுக்கு ஏற்கெனவே ஓர் அறிக்கை சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 35 ரூபாயாக ஏறியிருக்கிறது. மிளகாய் விலையைக் கட்டுப்படுத்த ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : மிளகாய் விலை சில இடங்களில் இறங்கி யிருக்கிறது, சில இடங்களில் ஏறியிருக்கிறது. எந்த இடத்தில் மிளகாய் விலை ஒரு மணு 22 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு அவர்கள் எழுதி அனுப்பினால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் பதிலிலே நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித் தார்கள். நீலகிரி மாவட்டத்தில் அரிசி உற்பத்தி செய்யப்படுவ தில்லை. கீழே இருந்துதான் அரிசி மேலே வரவேண்டும். அங்கு ஏற்கனவே இருந்த 75 நியாய விலைக் கடைகள் 50 ஆகக் குறைக் கப்பட்டு விட்டன. ஆகவே நியாய விலைக் கடைகளை மேலும் திறக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

---

[a] Printed as Appendix on pages on 414–417.